உ

சிவமயம்.

கணபதிதுணை.

திமிரி

சோமநாதேஸ்வரர்

தோத்திரப்பா.

திருச்சிற்றம்பலம்

காப்பு வெண்பா.

மாணிக்கஞ்சாலிவளஞ் செய்திமிரிநகர்
மாணிக்கவண்ணன் மலரடிக்கே, பேணிச்சொல்
பத்திநிதம் பாலிக்கும் பரவுந்துதிக்கைமிகு
மத்திமுகன் செம்பொன்னடி. (1)

சீர்த்திமலர்மாடஞ் செறிதிமிரியம்பதியி
லாத்திமலர் சூடியடியிணைக்கே. நாத்திகழுந்
தோத்திரச்சீர்ப்பாமாலை சூட்டுவதற்கெப்பொழுதும்
காத்திரச்சீர் வேழமுகன் காப்பு. (2)

குருநாதன் வணக்கம்.

கலி விருத்தம்.

நீண்டமாயைக்கரும நிகழ்மலம்
வேண்டுமட்டும் விளைக்கும் பவத்துயர்
தூண்டுந்தொண்டு தொலைத்திடுமென்றனை
யாண்டுகொண்ட வழகனை யேத்துவாம். (3)

ஆவரண மலமயக்காலரனிலே யென்றொரு
பறையையறைந்து சீழாந்
தாவர வெம்பிறப்பினுங்கீழ்க் கொடும்பிறவி
நரகினுக்கே சாருமென்றன்
நாவரனே யெனத்துதிப்பவருட்சரிதஞ்
செவிகேட்ப நயனநாதன்
மாவருணத்திரு மேனி தரிசிக்க
மெய்யடிக்கே வணங்கிவாழ (4)

துண்ட மறைச்சிலம் பொலிக்குஞ் செஞ்சரணக்
கோகனகச்சுகந்த மோப்ப
வண்டமிழிற் பதிஞான நூல்பயிற்றிச்
சிற்றறிவை வளர்த்து நீல
கண்டனடியவனடியர் தொண்டரடித்
திருப்பணிகள் காட்டிச்சைவத்
தொண்டறிவித்தருள் சோமசுந்தரனெங்
குரவனடிதொழுது வாழ்வாம் (5)

சோமநாதேஸ்வரர் தோத்திரப்பா.

ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்.

நீர்கொண்ட மதிநதிச்செஞ்சடா மகுடமும்
நீற்றொளி யிலங்குமுகமும்
நேத்ர மூன்றும் முறைகளேற்ற விருசெவிகளும்
நிகமம்புகன்றவாயும்
கார்கொண்ட கண்டமும் வரதமும் மபயமுங்
கையினமர் மானுமழுவும்
கட்செவிக்கங்கணமு நூலுமார்பும்புலிக்
கரியுரியுடுத்தவரையுஞ்
சீர்கொண்ட வுமையிடப்பாக மும்மிடை யேந்து
சேவற்கொடிப்பிள்ளையுஞ்
செஞ்சரோருகமலர்ச்சரணமுங்கண்டு தொழ
சேவேறிவந்தருளுவாய்
வார்கொண்டணிந்தமுலை மடநலார்கற்புதவு
மழைமல்கு திமிரிநகர்வாழ்
வரவாம வேதாகவில் திருநாமமோதுதவர்
மகிழ் சோமநாத சிவனே (1)

நின்னடிக்காளாகிநில்லாது பொய்த்தெய்வ
நெறியுழன்றேவிழற்கு
நெடியமுத்துலைபிட்ட நீசனேனுய்க்குநிகர்
நேராததுர்வாசனேன்
பின்னடிக்கெய்துதுய ரெண்ணாத திட்டனேன்
பேணுமெய்ந்நூல் பொய்யெனப்
பேசுவேனாத்திகத்தேசு முழு மூடனேன்
பின்னுய்யுநாளுமுளதோ
முன்னடிக்கிளைதாவு கவிகழைக்கூத்தென்ன
முடுகுநந்தனவனத்தின்
மொழிபூவை கிள்ளை யரகர சிவசிவாவென்ன
மொய்த்தமலர் கட்ட விழ்ந்து
மன்னடித்தொண்டரிற் கண்ணீர் பெருக்குவயல்
வளமல்கு திமிரிநகர்வாழ்
வரவாம வேதநவில் திருநாம மோதுதவர்
மகிழ்சோமநாத சிவனே (2)

ஆகமத்தளவையான் முப்பொருளுணர்ந்துமல
மாக்கு பொய்ப்பாச ஞானம்
ஆன்மபோதத்தினும் பசு ஞான மற்றுநின்
னடிஞானவானந்த மெய்
யூகவத்துவித சிற்பரபோக மெய் துன்பி
னுருகிசிவசிவ வென்றுனை
யுன்னியவருச்சனை புரிந்து திருமுன்னர்நின்
றோதுவது மெந்தநாளோ
நாகமத்தினைநட்டு நாகக்கயிற்றினாலை
நாகர்கடைந் தெழுந்த
நஞ்சுண்டு காத்தமணி கண்டனே யண்டனே
நளையம் புலித்துண்டனே
மாகமத்துணையளவு வெண்சுதையின் மாடங்கள்
வளமல்கு திமிரி நகர்வாழ்
வரவாமவேதநவில் திருநாம மோதுதவர்
மகிழ் சோமநாதசிவனே. (3)

கோயிற்றிருப் பணிகள் செய்தலோடலகிடல்
கோலமொடு மெழுகமைத்தல்
கொந்து மலிநந்தனவனம் வைத்தன் மாலைபல
கோத்தலணியக் கொடுத்தல்
தாயிற் சிறந்த வடியார்க் கன்னவத்திரந்
தந்தேவல் கேட்டிறைஞ்சல்
சந்ததஞ்சலியாத சிந்தை தந்தென்னைநின்
றன்னடிக்கடிமை கொள்வாய்
தீயிற்செறிந்த தளிர் மாக்க முகுபூவரசு
திந்திருணியால சோகு
தெங்குபனை கதலிகமுகங் கனைப்பூந்தடந்
தினமுழுகி நீறணிந்து
வாயிற் செலும் புலனடக்கு வோர்தங்குமட
மாடமிகு திமிரி நகர்வாழ்
வரவாமவேதநவில் திருநாமமோதுதவர்
மகிழ் சோமநாதசிவனே (4)

இல்லறத்துறைமுறையினை தங்கெடுத்துபொரு
ளீட்டி யெவருக்கு மையம்
இட்டுணேன் கூழிலீயென் றொருவனவில வீழ்ந்
திடிகேட்டவரவ மாவேன்
வல்லற மெனுந்துறவு பெற வேண்டலெட்டாத
வானேற வேணிநாட்டி
மலையேற லொக்கு மாதலினெந்த வகையுய்யு
மாசின் மெயயுணர்வு பெறுவேன்
அல்லறவிளங்கு நவமணி யிட்டிழைத்த வெயி
லணியெழு நிலைக்கோபுரம்
ஆலயந்தரிசித்த வடியர்வானேறுதற்
கானாட்டு மேணியென்றே
மல்லறங்கற்றகவி வாணர் கொண்டாடு புகழ்
வளமல்கு திமிரி நகர்வாழ்
வரவாமவேதநவில் திருநாமமோதுதவர்
மகிழ் சோமநாத சிவனே. (5)

தண்டிகைசுமந்து தோள்காய்ப்பிலேன்கைக் கொண்டு
　　தண்குடை நிழற்றியறியேன்
சாமரையிரட்டிலேன் பூமலர் சுமக்கிலேன்
　　றளிர் தீவிளக் கேந்திலேன்
கண்டிகைதரித்திலேன் வெண்பொடிப் பூசிலேன்
　　கனியஞ்செழுத் தெண்ணிலேன்
கால்கொடுன்பின் வரேன்கவின் விழாத்தரிசியேன்
　　கைகூப்பியேனுமறியேன்
அண்டிகைப்பாசத்திறுக்கி மோதுங்கடா
　　வநதகற் கென்சொல்லுவேன்
ஐயனேநின்றிரு வடிக்கபயமாயினேன்
　　அஞ்சலென் றருளல் வேண்டும்
மண்டிகைக் கூப்புமஞ்சலிமாலை பாமாலை
　　மலர்மாலைநிறை திமிரிவாழ்
வரவாம வேதநவில் திருநாம மோதுதவர்
　　மகிழ்சோமநாத சிவனே (6)

சம்புசங்கர மஹாதேவசர் வோத்தம
　　சைல கோதண்டதீர
சகலசம்ப்ரமபகவதற்பர விசுவாதீத
　　சாம்பவ கிரீசநிமல
நம்பவம் பிகைபாக கங்காதரப் பிரிய
　　நாதபுங்க வருத்திர
நாகவாபரணகருணாதீத கங்காள
　　நடராஜதிரி நேத்திர
கும்பமதமா தங்கவம் பரக்ருபாகர
　　குணரகித காலகால
கோடீரவிமல வரகரசிவசிவா வென்று
　　கும்பிடுவதெந்தநாளோ
வம்பளகமாதர் மேனிலையிலர மாதரம்
　　மனையாடு திமிரி நகர் வாழ்
வரவாம வேதநவில் திருநாமமோதுதவர்
　　மகிழ் சோமநாத சிவனே. (7)

எண்ணெயானைந்த முதலமைந்து நெய்பாறயிரோ
டினியதேனிக்கினிரதம்

இன்பழச்சாறு தெங்கிளநீர்நறுஞ் சந்த
மியைதபன முறையினின்னைப்

பண்ணியபிடேகம் விரைப்புழுகு கத்தூரி
பனிநீர் தெளித்துடுத்துப்

பதநிவேதித்து வெள்ளிலை யுதவிமிக்கதூ
பந்தீபவாராதனை

எண்ணும் விதியிற் புரிந்தர்ச்சித்துமுன்னநின்
றீசனேயுமை நேசனே

ஏகனேயோகனே போகனேத் யாகனே
யென்றுருகி நிற்பதெந்நாள்

மண்ணுலகு விண்ணுலகு பாதலந் தொழுமகிமை
வளர்கின்ற திமிரி நகர் வாழ்

வரவாமவேதநவில் திருநாம மோதுதவர்
மகிழ் சோமநாத சிவனே (8)

காழிவரு பிள்ளையும் மாழூரினரசருங்
கடிநாவலூர் நம்பியுங்

கனிவாத வூரடிகளுந் தேன் சருக்கரைக்
கண்டு முக்கனிகளென்ன

ஊழிற்றுதித்த தேவார திருவாசகத்
துண்மை நன்காய்ந்துணர்ந்துள்

ளுருகிவிழி நீர்வரச்சந்நிதியினின்றுநித
மோதிப் பணிந்தெழுவனோ

மேழிப்பெருஞ் செல்வரேருழுங் கழனியின்
மிடைபன்னிறத் தெருதுகள்

வேலையஞ் சேலைபுனை பூமியந் தேவிநவ
மிளிர்மணி யிணரமொக்கும்

வாழிக்கதிர்ச் செந்நெல் செம்பொன்னை யொக்குமவ்
வளமல்கு திமிரி நகர் வாழ்

வரவாமவேதநவில் திருநாம மோதுதவர்
மகிழ் சோமநாத சிவனே (9)

மொழியிலே மின்னார்கள் விழியிலே நாசியொளி
முத்தத்திலத்தத்திலே
முலையிலேயொளிர் சித்ரகலையிலே நிலையிலே
மோசத்திலே சித்திலே
சுழியிலே யிமையிலே யிழிவிலே யெழிலிலே
சுரி குழலிலே சுழலிலே
சூதிலே வாதிலே பழிபாவம் வருமென்று
தோன்றாதபடுகுழியிலே
அழிவிலே சேராதுனருளிலே தெருளிலே
யறிவிலே நாற்பொருளிலே
அடியிலே யுன்னடியரடியிலே நீங்காத
வன்பு தந்தாளல் வேண்டும்
வழியிலிரு நான்கினொடு மூவெட்டெனுந்தருமம்
வழுவாத திமிரிநகர் வாழ்
வரவாம வேதநவில் திருநாம மோது தவர்
மகிழ் சோமநாத சிவனே (10)

காமனை யெரித்தமுக்கண்ணனே திரிபுரங்
கனலெழ நகைத்தவுரனே
காலனையுதைத்த செங்காலனே வேதியன்
கங்களேந்திட்டபரனே
மாமனுக்கொத்த வாட்டுத்தலை தெரிந்திட்ட
மருகனே மலை மருகனே
மான்மழுக்கையனே மோனமுத்திரையனே
வன்புலித்தோலரையனே
சோமனைத் தலைகட்டு மழகனே வேணியிற்
சுரநதி யுறுங்குழகனே
துரியனே சுருதி புகலரியனே பெரியனே
தொண்டர்த முளப்பிரியனே
மாமனைச்சிவகாமி நேயனே தூயனே
வாவியந்திமிரி நகர் வாழ்
வரவாம வேதநவில் திருநாம மோது தவர்
மகிழ் சோமநாத சிவனே (11)

நற்குணக்குன்றேறு நல்லவர்களுண்டென்று
நரகவேதைக்கஞ்சுவார்
நல்லுதாரத்வமே மெய்ப்பாவனெனக்கொண்டு
நாடார் பொருட் சிறுமையை
துற்குணக்குழி வீழுமவர்கல்வி செல்வந்
துரும்புக்கு மொப்ப நினையார்
துன்ப வெம்மிடிவரினுநந் தீவினைத்தெறுஞ்
சுகமறக்கருணையென்பார்
சிற்குணத்தனிவேத சித்தாந்த வாக்கியத்
தெளிவெய்தியுள்ளுவப்பார்
செம்மை நெறியாயிரத்தொரு கூறளிப்பையேல்
சிறியனுய்யா தொழிவனோ
வற்குணர்க்கெட்டாத நீதனே போதனே
வரதனே திமிரிநகர் வாழ்
வரவாமவேதநவில் திருநாம மோதுதவர்
மகிழ்சோம நாத சிவனே (12)

புனித மஞ்சன நீரினபிடேக மாட்டுவோர்
புன்மை தவிர்சாந்த முறுவார்
புனுககிற் கத்தூரி சந்தனம் பூசுவோர்
புகழ்மிக்க வாயுள் பெறுவார்
இனியபாலாட்டுமவர் சத்ருநாசம் பெறுவ
ரிணர்சாத்தியர்ச்சிப்பவர்
இணையில் செல்வம் பெறுவர் தூபங் கொத்தவர்க
ளெண்ணில் பாவம் போக்குவார்
நனிதீபமேற்றுவோர் நமனைக்கடந்திடுவர்
நல்லமுதருத்திமகிழ்வோர்
நாட்டரச ராவருத்தமதான நல்குவோர்
நவிலட்ட சித்தியடைவார்
மனிநித்தம் வடமொழித் தென்மொழிச்சுருதி யொலி
மாறுதமிரிநகர்வாழ்
வரவாம வேதநவில் திருநாமமோதுதவர்
மகிழ்சோமநாத சிவனே (13)

பசுங்கொடிபடர்ந்தசெம்பவளப்பொருப்பெனப்
பாவையொடு வீற்றிருக்கும்
பசுபதீநரகெலாந் துய்க்கிலும் போதாத
பாவியேன் புன்முகம்பார்த்
திசைந்துள்ளிரங்க விலையாரிடஞ்செல்லுவே
னெந்தவகையி னியுய்குவேன்
எண்ணின் மாபாதகந் தீர்த்தநின் விளையாட
லெண்ணுவேன் வேறென் செய்வேன்
விசும்புறுபசும்பொற்றசும்பவிர்விதானமலி
வீதிமணி முரசமாதி
விரிபல்லியங்களொலிமிக்கதிரு வோலக்க
விழவினைக்கண்டு மகிழும்
வசுந்தரையிலாடவரு நாரியருமரவோலிசெய்
வாழ்த்துமிகு திமிரிநகர் வாழ்
வரஙாம வேதநவில் திருநாம மோதுதவர்
மகிழ் சோமநாத சிவனே. (14)

தில்லைகாளத்திதிருவருணை யானைக்கா
திருக்கச்சி கமலாலயஞ்
சீர்காழி வேதபுரி யாலவாய்ப் பூவணந்
திருவொற்றியூர் வான்மியூர்
நெல்லை நெய்த்தான மாலங்காடு வெண்காடு
நிகமவாரணிய மயிலை
நின்றியூர்கோவலூராயாறு நள்ளாறு
நீடேரொடஞ் சைக்களம்
முல்லைவாயில் கழுக்குன்ற மாகறலணின்
முட்டமவி முத்தமதிகை
முதுகுன்றிருங்கயிலை யாதித்தலங்கண் மகிழ்
முத்தனே முத்திதருவாய்
மல்லலங்கழனிக்கருஞ் சேறுபுலராத
வளமல்கு திமிரி நகர் வாழ்
வரவாமவேத நவில் திருநாமமோது தவர்
மகிழ் சோமநாத சிவனே. (15)

பருவுகலியையாயிரத் தேழினிகழும் விசு
வாவசுப் பேராண்டினின்
மதியிட பரவியினன் மதியீகையாள ரொடு
மதிநிதிவளர்த்து தவியே
திருவுலகசாந்தி யென்றேத்திடுங்கும் பாபி
டேகம்புரிந்த வன்பன்
செங்குந்தர்மரபினு னெங்குந்தனிசையினுன்
செங்கரந்தங்கு கொடையான்
உருவமிகுராஜனற் பேரினுன் சென்னியில்
லுள்ளத் தினன்னுவினில்
ஒருவாது தங்குநின் சரணுரவிந்த மென்
னுெருதலையிலேனு மருள்வாய்
மருவளத்தள வினுன் மலரினுன்காணுத
வள்ளலே திமிரி நகா வாழ்
வரவாமவேதநவில் திருநாமமோதுதவர்
மகிழ் சோமநாத சிவனே. (16)

ஆமனச் செம்மையோ ரருளன்பு கொண்டோது
மந்தமிழை யேற்பதற்கே
யங்காப்படைந்த நின்னம் பொற்குழைச்செவிக
ளாணவத்திமிர நீங்காத்
தீமனப்புன்மையேன் புன்சொல்லை யேற்குமோ
தில்லையம்பல நாடகத்
தேவனேபே யோடுமாடி நீ யாதலிற்
செவியேற்றிரங்கல் வேண்டும்
பூமனைக்குடியிரு மடந்தைய ரெனத்துனும்
பூந்தாமரைத்தவி சிடைப்
பொலியுமன்னங்கல்வி செல்வநிலை பெறுதலைப்
பொற்புறக்காட்டு மாட்சி
மாமனக் கூடமாளிகை மாட கோபுரம்
வளருமணி திமிரிநகர்வாழ்
வரவாமவேத நவில்திருநாமமோதுதவர்
மகிழ் சோமநாத சிவனே. (17)

திருச்சிற்றம்பலம்.

தோத்திரப்பா.

திருச்சிற்றம்பலம்.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மாடகத்தொளிரு மேனியு மிடப்பான்
மரகத மயிலுமைமைந்தனு மாம்
நாடகத்துணேயே நாடகந்தந்து
நாயினேன் மலமொழித்தளிப்பாய்
நீடகத்தொளியின் வாழும்வண் குடிக
ணெற்பயிர் முன்விளைத்தாக்கும்
ஆடகத்திமிரி மாநக ரமர்ந்த
வமலனேயமரர் நாயகனே (1)

புகலிகாவலர் சொல்லரசர் வன்றொண்டர்
பொன்னடி யிறைஞ்சி மற்றவர்தம்
நிகரினல்லருட் பாநிதமெடுத்தோதி
நினைத்தொழு நெறியெனக் களிப்பாய்
பகர்மணிச்சேடன் முடியுறீ இயமரர்
பாடுறும் பதிநிழல் காட்டும்
அகழிசூழ் திமிரி மாநகரமர்ந்த
வமலனேயமரர் நாயகனே. (2)

வாதவூர்க்கிறைவர் வாய்மலர் சொரிந்த
வாசகத்தேன முதருந்தித்
தாதவிழ மலர்ப்பூஞ் சரண்பணிந்துனது
தாள்பணிந்திட வெனக்களிப்பாய்
மீதவழ் பசும்பொன் மணிமதிலுச்சி
மேலிருந்தலர் கதிர்க்கரங்கொண்
டாதவன் வணங்குந்திமிரியிலமர்ந்த
வமலனேயமரர் நாயகனே. (3)

திருவிசைப்பா மெய்ம்மந்திரமாதித்
திருமுறையுரைபெரு மக்கண்
மருவிசைப்பாத முடியணியாக்கி
வழுத்தியுன் றனைத் தொழவளிப்பாய்
இருவிசும்பகடு கிழித்தெழுஞ்சிகரி
யெழுநிலை யெழுபொழிலென்ன
வருளிசைத்திமிரி மா நகரமர்ந்த
வமலனே யமரர் நாயகனே. (4)

சேக்கிழார் திருவாய் மலரினின்றூறுந்
தேனெனும் பெரிய நற்புராண
நாக்கிழானிவ னென்றுரை செயநாளு
நவிலு மெய்யன்பெனக்களிப்பாய்
பூக்கிழார் மணிமண்ட பஞ்சுதைமாடம்
புரியறச்சாலை நீர்ப்பந்தர்
ஆக்கியார் திமிரிநகரியிலமர்ந்த
வமலனேயமரர் நாயகனே. (5)

புனைமணி நீறுபுறத்துறுப்பாகப்
பொய்ப்பவ மொழிக்கு மஞ்செழுத்தே
கினையகத்துறுப்பாவளித்த நின்னருளி
னிலையினையெண்ணுமாறளிப்பாய்
கனைபுனலொழுக்கங்காலறுக்கழனிக்
கதிர்க்குவை நெல்விளைந்தோங்கி
யனமலி திமிரி மாநகரமர்ந்த
வமலனே யமரர் நாயகனே. (6)

சரிதையர் கிரியையாளர் நல்யோகர்
தனிச்சிவ ஞானியரென்ன
வுரியராய்மல மோசனம் பெறுமொழுங்கி
னுண்மை தேர்ந்தினை புறவளிப்பாய்
விரி மணித்திகிரிச்சங்கினை யேந்தி
வியன்வனப்பாம் பனைக்கிடந்தவ்
வரிவை நேர்திமிரிமாநகரமர்ந்த
வமலனே யமரர் நாயகனே. (7)

பூத்தெரிந்தணிவா ரேத்தொடு பணிவார்
போற்றிமெய்ப்புளகமே போர்ப்பார்
நாத்தெரிந்திசைக்கும் பாத்தொடை புனைவார்
நடுவெனை யிருத்திவைத்தளிப்பாய்
தீத்தெரிந்தோம் புஞ்சிவ் மறையவர்தஞ்
செய்கையினட்டுணமந்துதவும்
ஆத்திரிந்துலவுந் திமிரியிலமர்ந்த
வமலனே யமரர் நாயகனே. (8)

தானவர் புரமூன் றெரித்த புன்சிரிப்பென்
றனைப்பிறப்பிறப்பினில மூத்தும்
ஈனமும் மலங்கண் மேற்படச்சற்றே
யிருத்திவைத்தெனையினி தளிப்பாய்
தேனவிர் துளவத் தாமனை யல்லாற்
றேவரிற் சிறந்த வரிலையென்
றானெனக்கொண்டோய் திமிரியிலமர்ந்த
வமலனே யமரர் நாயகனே. (9)

கறைமணிமிடறு மாமைவன் கோடுங்
கரிப்புலியுரியும் வெண்டலையுங்
குறைமதிநதியுங் குஞ்சிதப்பதமுங்
கொடியனேன் மனம்பெறவளிப்பாய்
மறையவரரசர்வணிகர் சூத்திரர்கண்
மற்றையர் மனையடர்ந்திசையே
யறைமறு கணிசெய் திமிரியிலமர்ந்த
வமலனே யமரர் நாயகனே. (10)

திருச்சிற்றம்பலம்.

உ

சுந்தரவல்லியம்மைபதிகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆசிரியவிருத்தம்.

மலர்செறிபிறைப்பணிக்கொண்டையும் பைங்கதிரின்
மதிவதனமுஞ்சலதியின்
வழிகருணை நயனமும புருவமுந்நுதலுமெழில்
வளரும் மணித்திலகமும்
இலகுகனகக்கொப்புமோலையும் வள்ளையும்
ரத்தின மூக்குத்தியழகும்
இனியமித்தில நகையுமலர்வாயு மங்கலத்
திசைநாணுறுதகளமும்
நிலவுந் தொடிக்கரமு முலகீன்றவயிறுமொளிர்
நிதியிணெட்டியாணவரையும்
நிகரின்மணிமேகலையு நூபுரச்சரணமும்
நேர்கண்டிறைஞ்சவருவாய்
கலைமதியிருல் கிழித்தூறல் பாய்வளமிக்க
கழனிமலி திமிரிநகர்வாழ்
கருமலந்தெறுசொல்லிபெரு நலந்தருசெல்வி
கருணை சுந்தரவல்லியே. (1)

பாயைகன்மம்மலந் தோயனந்தங்கோடி
மகவுபெற்றவைகளுக்கா

மலியனந்தங்கோடியண்டம் வகுத்தந்த
மாக்குடும்பம்பேணுதற்

காயவேதம்வள்ள லென்றேத்திடுங்கணவ
னள்ளியிருநாழினெல்லே

யருளவாங்கிச் சிற்றிலாடு நின் மகிமையிக்
கறியவல்லார் யாவரே

தீயகத் தெட்டாத சித்தாந்த வமுதமே
சின்மயானந்தரசமே

சேமநிதியே முடிவின் மோனகதியே யடியர்
சிந்தையிலினிக்குமதியே

காயகற்பந்தேடுசித்தர் முனிவரர் தொழுங்
காட்சிமிகு திமிரிநகர்வாழ்

கருமலந்தெறுசொல்லி பெருநலந்தருசெல்வி
கருணைசுந்தரவல்லியே. (2)

அனலாடி நஞ்சுண்ட களனன மணவாள
னடியார்களுக்கருள்பதன்

னுகந்தனுகம் பொருந்த வாமத்தின்வைத்
தணையுமச்சார்பினுகும்

பினலார் சடைப் பிறைக்கங்கையானென்றுமறை
பேசுநற் பேரனெனினும்

பெருநெருப்பங்கையிற் கண்ணிற் சிரிப்பினிற்
பெற்றவன் றருமனுயிரைத்

தினவீசுகாலனுஞ் சிறுவிதியின் மகமட்ட
தீதனுஞ் செயல்பொறுத்துச்

சிவனென்னு மங்கலத் திருநாம நிலைவைத்த
தேவிநின் கற்பு மெளிதோ

கனலாரவளர் வேள்விமறையாளருறைவீதி
சுனமேவு திமிரிநகர் வாழ்

கருமலந்தெறுசொல்லி பெருநலந்தருசெல்வி
கருணை சுந்தரவல்லியே. (3)

ஆனந்த வடிவநீயயனுவிலன்னைநீ
யரிமார் பிலஞ்செல்விநீ

யரனிடத்தம்மைநீ யீசன்மகேசைநீ
யருள்சதா சிவசத்திநீ

மேனந்தலில்லாத விச்சைநீ கிரியைநீ
விரிஞான நீயருளுநீ

வெண்மதித்தண்மைநீ விண்மணிச்சோதிநீ
மேவு மண்ணிற்றிண்மைநீ

பானந்தரும் புனற்சாரநீ வெம்மைநீ
பவனத்தின் மிகு மூக்கநீ

படர்வான் கலப்புநீயுயிரினுக்கு யிருநீ
பகரவுன் பெருமை யெளிதோ

கானந்தலில்லாத வானந்தொடுங்கான
கம்மிலகு திமிரிநகர்வாழ்

கருமலந்தெறு சொல்லிபெரு நலந்தரு செல்வி
கருணை சுந்தரவல்லியே. (4)

ஆன்னைநீபல்லாயிரக் கோடியண்டங்க
ளாக்கியவ்வவ் வுயிர்களுக்

கானமுப்பத்திரண்டறமும் வளர்க்குநா
யகியென்ன வாரணங்க

ளுன்னையே புகல நீயென்மட்டிரங்காத
வோரம் படைத்ததென்னோ

வொருவனுனல்ல வோதயையுனக்கில்லையோ
வுயர்தீவினைக் கொள்ளையோ

பொன்னையே மணியையே யனையமானேதிரி
புராந்தகற் கினியதேனே

புனிதமறைமாமுடிக் கூவுகுயிலேகவின்
பொலிகின்ற பச்சைமயிலே

கன்னியே சகலசம்பன்னியே பொன்னெயிற்
கதிர்வீசு திமிரி நகர்வாழ்

கருமலந்தெறு சொல்லிபெரு நலந்தருசெல்வி
கருணைசுந்தர வல்லியே. (5)

தற்பரற் கருணையந்தருமேனி நல்குமத்
தன்மையிற் றுயாயினுய்
சங்கரற்கானந்த போகவடிவாகுமத்
தகுதியின் மனைவியானுய்
மூற்பரம்பொருளினின் றும் வெளிப்பட்டவம்
முறைமையின் மகளாயினுய்
முதுசிவஞ்சத்திபெனும் வரிசையிற்பின்னிற்கு
மொழியினிற் றங்கையானுய்
உற்பவத்தனுகரண புவனபோகங்களா
யுயிரினுக்கு யிராயினுய்
உண்மையிற்றுய் தந்தை குருதெய்வம் நீயென்ன
வுணர்வ தொன்றேயருளுவாய்
கற்பகத்தரமகளிர் கற்பகத்தவருறவு
காணவரு திமிரி நகர்வாழ்
கருமலந்தெறு சொல்லி பெருநலந்தரு செல்வி
கருணை சுந்தர வல்லியே. (6)

பிள்ளையூனுண்டிடப் பேரிச்சை கொண்டவன்
பிரியன் மனைவியை நச்சினேன்
பெரியவேடன் செருப்படி யெச்சிலூனைவிப்
பிரனறியவுண்ட வாயன்
கொள்ளையிட்டுத் தோழனம் பொருள்கவர்ந்தவன்
கோவணக்கள் வனேடுங்
கொண்டவன் கணவனைக் கொண்டமுழு நீலியென்
குற்றந்தடுத் தாள்வையோ
கிள்ளைகின்பேர் சொல்லவளியினம் பாடவிரி
கேகயந் தோகையாடக்
கெழுமியநறுங் கொன்றைபொன் சொரிய காந்தள்செங்
கேழ்கிளருமங்கை யேற்பக்
கள்ளையுகுதாதவிழ் மலர்த்தண்டலைச்சூழல்
காட்சிமிகு திமிரி நகர்வாழ்
கருமலந்தெறு சொல்லி பெருநலந்தரு செல்வி
கருணைசுந்தர வல்லியே. (7)

தேர்முழக்கங் கரியினர் முழக்கம்பல்கு
திரைமுழக்கம் பலபதா
திகண்முழக்கம் விழாவிய முழக்கம்மேழு
திரைமுழக்கம் மடக்கும்
நார்முழக்குந் தொண்டரரகர சிவாவென்று
நாத்ததும்பத்து திக்கும்
நன்முழக்கம் பெருகுசந்நிதி முனின்றுமறை
நவிலுமாயிர மாயிரப்
பேர்முழக்கங் கண்ணினீர் வழக்கம்பத்தி
பெறுபழக்கம் விடாது
பேதையேற்கனு தினந்தரவேண்டுவேனன்றி
பின்னையொரு நெறிவேண்டிலேன்
கார்முழக்கம் மருமாதமும்மாரி பொழி
காட்சிமிகு திமிரி நகர்வாழ்
கருமலந்தெறு சொல்லி பெருநலந்தரு செல்வி
கருணைசுந்தர வல்லியே. (8)

கொலைகளவு கட்காமங் குருநிந்தைசிவநிந்தை
கொடுமைபொய் கோப மோகங்
கூறுபழிபாவமறியாமை லோபம் மதங்
கூடா வொழுக்க நீங்கி
நிலையுறுதியாசாரமறிவடக்கந்தவம்
நீதிநெறி பூசை பொறுமை
நியமமியமங்கொண்டு நின்னடிப்பூசிக்கு
நேயமொன்றேயருளுவாய்
மலையுதவு மங்கையே சிலையினேடைந்துகணை
மாரனுக்கருணங்கையே
மலியருட் கங்கையே யலைகடற்பள்ளியெனு
மாதவற் கொருதங்கையே
கலைப்பலவுணர்ந்த தமிழ்வாண ரிசையோடுபுனை
கவிமிக்க திமிரிநகர் வாழ்
கருமலந்தெறுசொல்லி பெருநலந்தரு செல்வி
கருணை சுந்தரவல்லியே. (9)

அருணாடகத்தினிருசரணாம்புயத்திபல
வருணாடகத்திமுத்தி
யருணாட கத்திமல விருணாசனத்தியொளி
யருணாசலத்தி சித்தி
தருணாங்குயத்தியிழைதனை நேரிடச்சிகிரி
தருநாகரிக மலைச்சி
தனிவார் வலைச்சிமிகுதணிவார்கலைச்சிசக
தலமேழுநவில் பரைச்சி
பொருணாமறைச்சிவிரி தெருளாக மத்திநறை
பொழிபங்கயாசனத்தி
பொறிமாசுணத்தி னிருகரகங்கணத்திமிகு
பொறையார் புராதனத்தி
கருணா கடாட்சியெனவுச்சரிப்பேனையருள்
காட்சிமிகு திமிரிநகர்வாழ்
கருமலங்தெறு சொல்லி பெருநலந்தரு செல்வி
கருணைசுந்தரவல்லியே. (10)

மலைவல்லி கற்பூரவல்லி சுந்தரவல்லி
மலைவில்லி வாமவல்லி
மாணிக்கவல்லி மரகதவல்லிய பிடேக
வல்லிய பிராமவல்லி
அலைவல்லி கலைவல்லி துதிதல்லிநிறை செல்வி
யமலையாரணி பூரணி
அனகைகல்யாணி சர்வாணி நாரணி சுகுணி
யமணியந்தரி பவானி
நிலைவல்லி சத்திசாம்பவி கௌரிமுக்கண்ணி
நிகிலபரி பாலிநீலி
நிமலைசங்கரி மஹாதேவி யோங்காரியென
நிதமுச்சரிக்க வருள்வாய்
கலைவல்லவாணரிய விசைநாடகத் தமிழ்க்
காட்சிமிகு திமிரி நகர்வாழ்
கருமலங்தெறு சொல்லி பெருநலந்தரு செல்வி
கருணை சுந்தர வல்லியே. (11)

ஏழையேனிடு முறைகளே றவிலையேசெவி
யிரங்கவிலையே நெஞ்சகம்

எறெடுத்துக்கண்கள் பார்க்கவிலையேயிஃ
தியற்கையோ முன்னமீன்ற

பீழையுறு தக்கனுக் கேற்றகுண மோபின்னர்
பெறுமலைக்கல் லினியல்போ

பின்னும்பு குந்தகயிலாயப் பொருப்பெனும்
பெரிய வீட்டுத்தன்மையோ

மாழையொண் கண்ணியே யொருபரந்தாமியே
வனவேடர்மகண் மாமியே

மகிதலம் போற்று பரமேஸ்வரி தயாபரி
மதிராஜ ராஜேஸ்வரி

காழையொண் மணிவாரணந்தந்து வயனுலவு
கவினோங்கு திமிரி நகர்வாழ்

கருமலந்தெறு சொல்லிபெரு நலந்தருசெல்வி
கருணை சுந்தர வல்லியே. (12)

உ

திருச்சிற்றம்பலம்.

விநாயகர் பதிகம்.

பெருங்கழி நெடில் விருத்தம்.

ஒற்றை மருப்புமிருசெவியு முறுமுதம்மமு நால்வாயு
முதனைங்கரமு மறுசமயத்துறுதிக்கொடையுமுல கேழுந்

துற்றுவிளங்கும் பெருவயிறுந்துலங்கெண்குணமு நவமணிகள்
சுடருமுதரபந்தனமுந்தோன்றுந்திசைப்பத்தறும்புகழும்

பற்றும்பதியொன்றேயெனு முன்பன்னிரண்டு சூரியரும்
பலகோடியராயினு நிகராப்பாதவொளியும் பகடன்வரும்

அற்றைக்குதவிக்காண வெனக்கருளல் வேண்டுந்திமிரிநகர்
அண்டமுளவுந்திருக்கோயிலானைமுகத்தெம்பெருமானே. (1)

வாக்குண்டாகுமிகநல்லமன முண்டாகுமாமலராண்
மலர்ந்தநோக்கமுண்டாகும் வாய்த்தமேனிநுடங்காது
பூக்கொண்டென்றுந்தப்பாமற் புரியுமன் பிற்றிருப்பாதம்
போற்றிச்சாருமவர்க்கென்றபுவனத்தாயாமவ்வைமொழி
நாக்கொண்டேத்தியிறைஞ்சியுள்ள நயந்துவியந்தவ்வன்னபத
நளினமுடிக்கேயணியாக்கி நாயேனுய்யுநாளுளதோ
ஆக்குந் துகில்விதான முயர்ந்தங்கங்கிலங்குந்திமிரிநகர்
அண்டமளவுந்திருக்கோயிலானைமுகத்தெம்பெருமானே. (2)

பாலுந்தெளிந்ததேனுநறும்பாகும்பருப்புமிவை நாலும்
பருகக்கலந்து தருவேனீபகர் முத்தமிழுந்தாவென்றே
ஏலுஞானத்தம்மை தமிழ்க்கிறைவியேற்றபடி வழங்கி
எளிவந்திரங்கும்பெருங்கருணையெல்லாவுலகு மெடுத்தேத்தும்
தாலம்பாளைக்கற்பகத்தைத் தழுவிச்சுமக்குமதுக்குடங்கள்
சாருந்தேவராட்டுதற்காத்தாங்கும்பசும்பாற்கலமேய்க்கும்
ஆலும் வேலுமத்தியுஞ்சீரசோகு மோங்குந்திமிரிநகர்
அண்டமளவுந்திருக்கோயிலானை முகத்தெம்பெருமானே. (3)

நித்தவநித்தவத்து நிலை நேராக்கண்டுங் கேட்டறிந்தும்
நிகழுமனைவிமக்கண் முதனிலையாக்கருதிக் காப்பதற்கே
வித்தமுலுத்தர் கடைத்தலையில் வேண்டியூஎர் திரிந்தலைந்து
விளையாக்களரி லுழைப்பதெனவீணேகாலங்கழிக்கின்றேன்
கத்துங்கடற்பெய்கும்பமுனிக்கைக்குண்டிகைநீர்க்கவிழ்த்தொளிருங்
கனகநாடன் காவளர்த்துக்களைகட்டோம் புங்கணபதியே
அத்தம் வளரும் வீடுதொறு மறங்கள் வளருந்திமிரிநகர்
அண்ட மளவுந்திருக்கோயிலானைமுகத்தெம்பெருமானே. (4)

பத்திக்கடலினுள்ளெழுந்த பரவுங்கருணைத் தெள்ளமுதே
பாசப்பகையேபசுபோதப்பற்றுமிருடீர் பரஞ்சுடரே
முத்திக்கரசே யாதாரமுதலே முதலுங்கடையுமிலா
மூலநிதியே சிவானந்தமோன ஞானமணிவிளக்கே
தித்தித்துருக்கும்பொருட்சுவையுந்தீஞ்சொறசுவையுந்தெரிந்துருகுஞ்
செல்வருள்ளத்தடத்தலருந்தேனே சீனிச்சருக்கரையே
அத்திக்கெனக்கு நீயேயுன்னடைக்சலங்காண்டிமிரிநகர்
அண்டமளவுந்திருக்கோயிலானை முகத்தெம்பெருமானே. (5)

சொல்லார் சுருதியாதிகலைத்துவக்கந் துதித்தலொருகருமத்
தொடக்கம் வணங்கலாராயின் சுருதி முதலினடுக்கடையில்
வல்லானீயேயெனுந்துணிபின்வாய் மைவிளங்கநினிப்புணர்த்தும்
மதியிலேனுமது துணிந்தேவக்கண்டினன் மற்றெனையாள்வாய்
நல்லார்தெளி விநாயகனே நாட்டுத்தேவர் நாயகனே
நம்புமடியார் தாயகனே நம்பாதவரைக் காயகனே
அல்லார் குழலினர் சதுக்கத்தாடல்புரியுந்திமிரிநகர்
அண்டமளவுந்திருக்கோயிலானை முகத்தெம்பெருமானே. (6)

அக்ரவுகர மகரமெனவமைந்த பிரணவச் சொருபா
வம்மையப்பர்மகிழ் குமராவழகாவனகாவரிமருகா
தகரக்குழலார் சித்திபுத்திதழுவுங்கணவா வல்லையென்
ருய்க்குத்தகுந்த மணவாளா தம்பிக்குகந்ததிருத்தோளா
பகரவாகு வாகனு வெம்பரமாபரமபதநாதா
பாசாங்கு சமேந்தியகையா பாவநாசாவிக்னேசா
அகரவுயிராமெனு முதல்வாவஞ் சூழிஞ்சித்திமிரிநகர்
அண்டமளவுந்திருக்கோயிலானை முகத்தெம்பெருமானே. (7)

இருக்குமுனக்குமேலொரு நாயகனில்லாதவேதுவினல்
இருக்குமொழியும்விநாயகனென்றியன்மூவருநின்னகட்டொடுங்கி
யுருக்குமன்பிற்றவமுஞற்றியொருவாவரம் பெற்றுய்ந்தனரவ்
வுண்மைநயந்தேயுனையடந்தேனுய்யவெனக்குமருள்புரிவாய்
திருக்குந்தருக்கும்வஞ்சனையுஞ் செருக்குஞ்சின முந்தீவினையுந்
தீர்ந்தோருளச்செழுந்தவிசிற்செம்மாந்திருக்கும்பெருந்தேவே
அருக்கன்முதற்சோளிரத்தினமாயமைந்தங்கொளிசெய்திமிரிநகர்
அண்டமளவுந்திருக்கோயிலானை முகத்தெம்பெருமானே. (8)

பெற்றூர் தகைமக்கேற்பவவர் பெற்றபிள்ளைக்காம் பெருமை
பெரிதும் விளக்குமார்விகுதிபற்றுப்பிள்ளையாரென்றே
நற்றூரணி முன்னுட்டார்கணயந்துவிக்னநாதனெனும்
நாமமுழங்கியருச்சிப்பர் நல்லோனுய நின்றந்தை
செற்றூர் புரங்களவிய முனந்தேராதுன்னைச் செலுத்தியவத்
தெய்வத்தேரையச்சிறுத்துச்செய்த பூசைத்திருத்தலப்பேர்
அற்றூர்க்கருளச்சிறுபாக்கமன்றே வகிலந்தொழுந்திமிரி
அண்டமளவுந்திருக்கோயிலானை முகத்தெம்பெருமானே. (9)

வாழைக்கனி மாங்கனிவருக்கைவண்ணக்கனியேனையகனிகள்
வடை பாயசமோதகமப்பமது ரச்சுகிய மதிர சந்தீந்
தாழைக்கனிச் செந்தேன் மணக்குந்தயிர்பாலெய் நீங்கரும் பிரசந்
தருங்கற்கண்டு சருக்கரைச்செஞ்சாலியடி சில்பருப்பிவைநின்
பேழைக்கனிந்தவயினிரம்பப்பெரியோர்படைக்கும் பெருமையினைப்
பேசவிருநாவாயிரவாய்ப்பெரியோன்றனக்கு மரிதாமே
ஆழைச்சலதி வலம்புரிந்தாலனையவகழித்திமிரிநகர்
அண்டமளவுந்திருக்கோயிலானை முகத்தெம்பெருமானே. (10)

ஞாலம் விளங்க விமையவர் பொன்னாடு விளங்கப்பாதலமும்
நன்குவிளங்கத்திருநாரை நகரமவற்றின் மேல்விளங்கக்
கோலம் விளங்கு மாதிசைவக்குலமேல் விளங்கவவதரித்த
கோமானம்பியாண்டார்க்குலவு மூவரறுபதின்மர்
சீலம் விளங்கத்திருத் தொண்டின்றீரம் விளங்கப்பத்திநலம்
சீர்மைவிளங்கச்சைவநெறிச் செம்மைவிளங்கத்தெரித்தவனே
ஆலந்தோகைக்குயிற்கொடிக்கொக்களி சூழ்மலர்க்காத்திமிரிநகர்
அண்டமளவுந்திருக்கோயிலானை முகத்தெம்பெருமானே. (11)

கருவேதனைக்குங் கொடுங்காலன் கடிவாதனைக்குங் கலங்கிநிதங்
கனவு நனவுங்கம்பலைநீர்க்கண்வார்ந்தஞ்சுங்கருத்தினர்க்கே
இருவேறுலகத்தியற்கையெனு மெமையாள்குரவன் மொழிப்படியே
எல்லாமுதவும் பெருங்கருணை யெந்தாயதற்கி யானாரோ
தருவே திருவேசற்குருவே தன்னந்தனியே முக்கனியே
சாருங்கதியே பசுபதியே தாங்குந்துணையே பெரும்புணையே
அருவேயுருவே யருவுருவேயருளே பொருளே திமிரிநகர்
அண்டமளவுந்திருக்கோயிலானை முகத்தெம்பெருமானே. (12)

திருச்சிற்றம்பலம்.

சுப்பிரமணியர் பதிகம்.

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மதிநீறுபுனைதிலகமலர் முகங்களாறும்
மணியாழியெனுங்கருணை மலர் விழியிராறும்
நதிவேணியரன் மகிழ ஞானநவில்வாயும்
நகுவாகுவலயமொளிர் நயவரையிராறும்
அதிபாவிம்லையிலையை யறுத்தவயில் வேலும்
அரமகளுங்குறமகளுமமர்ந்த விருபாலும்
நிதிநீடுபதமுமயிற் றெரிசனந்தந்தருள்வாய்
திருவளருந் திமிரி நகர் சிவசிவசன்முகனே. (1)

புகழென்னும் பொருளுனக்கேபொருந்துமன்றியேனைப்
புங்கவருக்கொரு சிறிதும் பொருந்தா தென்றறிந்தேன்
நிகழருணைக்கிரிநாதனினை யேத்துமருட்பா
நீடுதிருப்புகழென்றே நின்றுவழங்குவதால்
அகழெயினர் திருமங்கையடி சுமக்குஞ் சிரனே
அழகேறுமயிலேறிய யிலேந்துங்கரனே
திகழுமரைக்குவளைமலர் செறிந்தபலகுளஞ்சேர்
திருவளருந் திமிரி நகர் சிவசிவசண்முகனே. (2)

தனமாக்குநினைவுடையோர் தவிடுமியும் போக்கார்
தசமென்பர் சதமென்பர் சகத்திரமொன்றென்பார்
மனம்வாக்குக் காயவழிவளருமருட் பொருளை
வரவின்றிச் செலவழிக்கு மடையனுக் கென்கதியே
கனமார்க்குங் குணின் முரசங்காள மிசைத்தாளங்
கனைநாம சுரமுழவங் கடிமுழங்குந் தீர்த்தந்
தினமாக்குந் தோரணமுந் தேரணியுஞ் சிறக்குந்
திருவளருந் திமிரி நகர்சிவசிவசண்முகனே. (3)

அரனார்க்கு மருளார்க்கு மகமுவக்குமகனே
அரியார்க்கிந் திரையார்க்கு மருமை மருமகனே
வரனார்க்குஞ் சரிவேடர் மகடழுவுங் குகனே
வானோர்க்கு மேனோர்க்கு மதிப்பரிய சுகனே
உரனுக்குந்திருத் தொடர்க்குதவிய கற்பகனே
ஓங்காரத்துருவான வொள்ளிய மெய்யகனே
திரனுக்குஞ் சேவடியிற் சேர்த்தணை மேதகனே
திருவளருந் திமிரி நகர் சிவசிவசண்முகனே. (4)

குலம்பேசிக்குணம்பேசிக் கோத்திரமும் பேசிக்
கொண்டபின்பு சலம்பேசுங்கொடியமனத்தவர்போல்
நலம்பேசிப் பொலம்பேசி நல்லவிசுவாசு
நயங்காசினிடையளவு நண்ணுவதொன்றில்லேன்
வலம்பேசுந்தனம் விழியுமலர்க்கேசக்கனமும்
வளங்கொண்ட நடங்கண்டு மருங்கலங்குமென்றே
சிலம்பேசிப்புலம்புமடித்தெரிவையர்களாடுந்
திருவளருந்திமிரிநகர் சிவசிவசண்முகனே. (5)

பரங்குன்றிற் பண்ணவனே பழனிமலையானே
பருப்பதங்கடோறும விளையாடு நறுந்தேனே
வரங்குன்று வேரகத்தின் மருவிய சீமானே
மகத்தாவினன் குடியின் மதிக்கும பகவானே
இரங்குந்தண்சீரலைவாயிருந்தருளெம்மானே
யிசைமலிந்திருத்தணிகை யெழுந்தருளெங்கோனே
திரங்குன்று தெனக்கருள்செய் செங்கையயிலோனே
திருவளருந்திமிரிநகர் சிவசிவசண்முகனே. (6)

அளந்திட்ட சுகந்துக்க மணுவளவுங்குறையா
தணுவளவு மேறுதென்றறியாதவறிஞர்
உளந்தொட்டவினையனைத்துமுற்பவந்தந்தொறுக்கு
முணர்ந்தார்க்கேயுனதுகழலொப்பினிழலின்பம்
வளந்தொட்டகுறிஞ்சிநிலமாக்கதொழுந்தலைவா
மலயமுனிக்கொருபெருநூல் வழங்குபெரும்புலவா
தெளிந்திட்டபெரியவர்தந்திருக் கூட்டஞ்சேர்ப்பாய்
திருவளருந்திமிரிநகர் சிவசிவசண்முகனே. (7)

கோமணக்குங் கார்த்திகைநாட்குரன் மணக்குங்கோழி
கொடிமணக்கு மயின்மணக்குங் கூர்வடிவேன்மணக்கும்
தேமணக்குந்தேவியர்தஞ் சீர்மணக்குந்தீர்த்தம்
தெய்வமணமணக்குமுனைத்தெரிசனஞ்செய்வேனே
பாமணக்கும் பூமணக்கும் பார்மணக்குஞ்சைவப்
பண்மணக்குங்கண்மணக்கும் பார்த்தவர்கட்கெல்லாம்
தீமணக்கு மோமகிலத் தேவர்மனை மணக்குந்
திருவளருந்திமிரிநகர் சிவசிவ சண்முகனே. (8)

வேலுமயிலுந் துணை யாவிரும்புமவர்க்கென்றும்
வெம்பகையும வெம்பிணியும் வெம்மிருத்துமில்லை
காலும்விடமிடிவிலங்குக்கள்ளர்பயமில்லை
கல்வி செல்வ நயநுகர்வர்கவினொழுக்கங்குன்றார்
ஏலுமனைமகப்பெறுவரிணையில் கதியடைவார்
இருக்கவெனக்கத்துணையே யென்றுமருள்புரிவாய்
சேலும்வரால் வாளைபல செறிபுமலர்ப்பொய்கைத்
திருவளருந்திமிரிநகர் சிவசிவசண்முகனே. (9)

சரிதைமுதலொழுங்கினர்க்கே தந்தைகதியளிப்பன்
　　தருமணத்திற்கதிவிருந்து சகலருக்குமளித்தாய்
பெரியவந்த விருந்துண்ணப் பெற்றிலன் வெவ்வினையேன்
　　பெருமானே யின்றுனடிபிதற்றியிரக்கின்றேன்
உரியனிவ னென்றிரங்கியுவந்தடிமைகொள்வாய்
　　உயர்சுப்ரமணியா வென்னுயிர்க்குதவிப்பணியாய்
தெரிவரிய மெய்ப்பொருளே தேவர்சேனுபதியே
　　திருவளருந்திமிரிநகர் சிவசிவசண்முகனே. (10)

ஒறுமையெனுங்கொடிய நமன்வாயில் வருந்தாமல்
　　மலியாசைப்பேயரெனும் வறியரைச்சேராமல்
மறுமையிம்மையில்லையென்னு மடயரைக்கூடாமல்
　　மதிமயக்கங்கொள்ளாமல் வாய்மைதவருமல்
பொறுமை முதற்குணநன்மை போக்காமலென்றும்
　　பொருந்தலதே பெரும்பொருளாப் போற்றவரந்தருவாய்
சிறுமையறவெப்பொழுதுஞ் செல்வமலிகின்ற
　　திருவளருந்திமிரிநகர் சிவசிவசண்முகனே. (11)

குமரகுருபரமுருக குணவறுமின்பாலா
　　குழகவரிமருககுக குறமின் மணக்கோலா
அமரசரவணவுசித வகிலபரிபாலா
　　அனகபரிபுரணசுகவளவிலனுகூலா
பமரகுரவணி சரணபதுமநயசீலா
　　பகவபல நகவிசித பகையவுணர்காலா
திமிரமலமகலவருள் திருவருள்விசாலா
　　திருவளருந்திமிரிநகர் சிவசிவசண்முகனே. (12)

திருச்சிற்றம்பலம்.

தக்ஷிணமூர்த்தி

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அறம்படைத்த மனையாளையுலகங்காக்கு
　　மாற்றல்பெறுமைந்தர்களையாசைவெள்ளிப்
பறம்படுத்த வீடுகளைக்கணங்கடம்மைப்
　　பகருமிருநிதிக்கிழவன்பற்றை நீத்துத்
திறம்படைத்த துறவறமீதென்னக்காட்டிச்
　　செழித்தவட நீழலிருந்தொருநால்வர்க்கும்
மறம்படைத்தமலமொழிக்குங் கைக்காட்டேய்ந்த
　　வரதனெனுங்குரவனடி வணங்கி வாழ்வாம். (1)

திருச்சிற்றம்பலம்.

க்ஷேத்திரப்பாலர்.

நேத்திரப்பாலனாற்
கேத்திரப்பாலனை
நாத்திறம் பாவகைத்
தோத்திரம் பண்ணுவாம். (2)

திருச்சிற்றம்பலம்.

திருநந்திதேவர் எழுசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.

சம்புவோடிரண்டாஞ் சம்புவென்றெவருந்
தாழ்ந்திறைஞ்சிடும் பெருந்தலைவன்
நம்பனங்கயிலை முன்றிலினெருங்கு
நகைமணிக்கற்பகமாலை
யும்பாதமகுட மொன்றொடொன்றுரிஞ்ச
வொளிமணிப் பிரம்புகொண்டொதுக்கும்
எம்பெருங்கருணை நந்தியெம்பெருமா
னிணையடிமலர் முடிக்கணிவாம் (3)

அகத்திய முனிவர் ஆசிரிய விருத்தம்.

எழுகடலைவழிமறித்தெழுமலையயலைதயிலு
மெழிலரியினுருவையங்கை
யிட்டுண்டுபாதலத்திட்டு குற்றாலத்
திருக்கிக்குறிக்கியெற்றி
முழுதுமினிமைப்பொருட்டுந்தமிழெனும்பெரிய
முந்நீர் நிலம்பெருக்கி
முன்னோன் மணத்துயிர்த் தொகைநெருக்கிச்சூழ
முதுநிலந்தெற்குயர்ந்தே
பழுதுறக்கண்டாணை மேற்கொண்டுமலயப்
பறம்படுத்தொரு துலையெனப்
படிநிறுத்திப்பரசிவாசாரியன்மகன்
பகருமருண் ஞானமுற்றந்
கழுதுயிர் வருத்தும் வில்வலனை வாதாவிவை
யகட்டழற் கண்ணழற்கே
யாக்கியபெருந்தவனை யெங்குடியையாண்டவனை
யகத்தியனையேத்தெடுப்பாம் (4)

திருச்சிற்றம்பலம்.

சண்டேசர் பதிகம் அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

புனனாட்டிற் சேய்ஞலூர்ப்புரி நூலந்தணர் குலத்தி
னினனாட்டில் வந்தானென்றியம் பவுதித்தேழாண்டின்
மனநாட்டு முப்புரிநூன் மணமியைந்து மறைமுதலாந்
தனநாட்ட முற்றடைந்த சண்டேசப்பெருமானே (1)

புனிற்றானை மேய்க்குமவன் புடைப்பவெகுண்டுரைத்துநெறி
யினித்தாவி நீமேய்த்தற்கேற்றவனன்றெனத்தடுத்தே
பனித்தாதியியலுணர்ந்தவரசே மண்ணிக்கரையிற்
றனித்தாவினிரை மேய்த்த சண்டேசப்பெருமானே (2)

விசும்பாருஞ் சீர்த்திநிறை வித்தகனே மண்ணியெனும்
அசும்பாற்றுமணர் கோயிலரனுருவமாக்கிநிதம்
பசும்பான்மைக்கை தீண்டாப்பசுப்பொழியும் பாலணைத்துந்
தசும்பார நிரைத்தாட்டுஞ் சண்டேசப்பெருமானே (3)

பெற்றேறந்தும் புண்ணியத்திற் பெரியானே யாயினுந்தன்
செற்றேறந்துந் தீவினையாற் சிறியானே யெனுந்தந்தை
கற்றேறந்து மறிவின்றிக்காலிடறக்கைக்கோலைச்
சற்றேந்தித்தாளெறிந்த சண்டேசப்பெருமானே (4)

வாளடுத்த திருமேனி மாறடித்த லறியாது
ஆளடுத்த சிவலிங்கவருண்மேனிச் சிதைவறிந்தே
கோளடுத்த தந்தை செயல் குறித்திரங்கித்தகுதியெனத்
தாளடித்துக்கதிசேர்த்த சண்டேசப்பெருமானே (5)

பசுமேய்க்கு மிறையுமறைப்பார்ப் பானுங்கண்டறியாப்
பசுமேய்க்குமிடயனுக்காப்பசுமேய்த்த பார்ப்பானே
பசுமாற்றினுயர்பொன்னின் பைங்கதிர மிக்குறவீசிச்
சசிமாற்றுந் திருமேனிச் சண்டேசப்பெருமானே (6)

என்பொருட்டுத் தந்தைதாளெறிந்தவுனக்கினிநானே
அன்புருக்குந்தந்தையென வறைந்தனித்தமறியாதான்
பொன்பொறுக்குமிதழிமலர்ப் பொலமகுடந்தரித்தணைத்துத்
தன்பெருக்குங்கருணைதருஞ் சண்டேசப்பெருமானே (7)

பெரும்பிள்ளை பெற்றவர்தாம் பின்பயந்த பிள்ளைக்கே
யரும்புள்ளத்தினிமையெலாமளித்துவளர்த்திடுவதுபோல்
விரும்புள்ளத்தவனருளான் மிசைந்தபரிகலச்சேடந்
தரும்பிள்ளை நீயேயாஞ் சண்டேசப்பெருமானே (8)

தந்தை தாயொடு தமயன்றம்பியெனு நால்வரொடும்
முந்துமுனைச்சேர்த்தைந்து மூர்த்தங்களெனக்கொண்டே
சிந்தைமகிழ்வொடும் பூசைசெய்துலகம்பிழைக்குமெனின்
சந்தமறைப்பொருளேநீ சண்டேசப்பெருமானே (9)

பாலினை மட்குடஞ்சிறப்பிப் பரப்புமணன் மேலாட்டல்
சீலமிதென்றறியாத சிறுபிள்ளை விளையாட்டோ
ஓலமறையிடும் பெருமானெனப்பிலருள் விளையாட்டோ
சாலமயக்கறத்தெரிப்பாய் சண்டேசப்பெருமானே (10)

தெய்வசிகாமணி மகிழுஞ் செய்வளத்தின் றவமணியே
மெய்வளரும் பெருந்தகையே விளங்கிய ஞானச்சிகையே
கைவளருமிருநிதியே கூடிதருள்செய் பரகதியே
சைவசிகா நன்மணியே சண்டேசப்பெருமானே (11)

திருச்சிற்றம்பலம்.

திருஞான சம்பந்தர் வேறு.

பொய்யுரைப்போர் தலையிலிடிவிழுமென்னு
முறுதிமொழி பெய்யாகாமல

உய்யவெழுத்தாணிகொடு திருமுறையே
டெழுதன் பருருகியென்றும்

நையுமனத்திருவாளர் வாக்கினிலத்
திரவாக்கை நாட்டியேசும்

வெய்யபுத்தன் றலையுருளவிடிநாட்டும்
பெருவாழ்வை விரும்பிவாழ்வாம் (1)

திருநாவுக்கரசர்.

எண்பாவும் பெரும்புகழ்சேருழவாரப்படைசெதுக்கு
மிடங்களெங்கும்
பெண்பாகனடைவித்த மணிக்கனகமரஃபையராற்
பிறழாதாங்குக்
கண்பார்க்குங்கல் லெனவும்புல்லெனவுந்தாயெனவுங்
கடந்துவென்ற
திண்பாகவருளுடையார் திருநாவுக்கரசரையாஞ்
சிந்தை செய்வாம் (2)

திருநாவலூரர்.

கானலை நீரெனக்கருதிக்கடுந்தாக மறவோடுங்
கலைகள்போல
ஆனலமென்றுள மயங்கியவ நெறியைத்தவ நெறியென்
றயர்வார்க் கெல்லாம்
ஈநலருட்பரம் பொருளீதுயிரீதுமல மீதேன்
றெடுத்துக் காட்டும்
தேநலநாவலர் பெருமான் றிருவடியேமணி முடியாச்
சிரங்கொண்டுவாம் (3)

திருவாதவூரர்.

கல்லுருகுமிரும்புருகு மண்ணுகுமர முருகுங்
கரைந்தவாயிற்
பல்லுருகு மென்புருகு முள்ளுருகு முறுதிபல
பயக்கும்வேதச்
சொல்லுருகு மரதனத்துச் சொன்முனென்பர ஃதிசைத்துத்
துகளிலன்பால்
அல்லுருகும் பகலுருகும் வாதவூரடிகளடிக்
கன்புசெய்வாம் (4)

சந்தானகுரவர், வேறு.

பெண்ணையெனுந் திருமடந்தைத் திரைக்கைநீட்டிப்
பிரசமலரருச்சிக்கப் பிறங்குங் கோயில்
வெண்ணெய் வந்து சிவஞான போதமுன்னு
விரியுமிரண் டெழுஞான நூல்விளம்பும்
திண்ணமுறு மெய்கண்ட தேவனந்தித்
திருஞான சம்பந்தன் றேர்ந்த மெய்ம்மை
யுண்ணயந்தவு மாபதியென் றொருநால்வர்க்கு
முறையிடமாவெமதுளத்தை யொப்புவிப்பாம் (5)

அருபத்துமூவர் வேறு.

சிவனேமெய்ப்பதி யென்று மவனடிமெய்ஞ்ஞானமே
திண்ணமென்றுந்
தவமாக்குந்தனியாண்மைத் திருத்தொண்டினு றைப்பாலே
சங்கரன்றாள்
நவநீதவனுபவத்துப் பெருமக்கடவம்கண்
ஞானமக்கள்
உவமானமறுமக் களறுபத்து மூவர்சர
ணுன்னிவாழ்வாம்

திருமால், பெருங்கழி நெடில் விருத்தம்.

பொன்னார் நீலமதிவதனம்
புண்டரீகத் திருநயனம்
பொலியுமுறுவற் செங்கனிவாய்ப்
பொருமைம்பணையார் கரதலஞ்சீர்
மின்னார் மணிப்பூமடந்தை நிறம்
விரிபூமடந்தைப் பெறுவயிறு
மிளிர் பொன்னுடை யிலங்குமனை
வேரிகமழு முண்டகத்தாள்
ஒன்றாரஞ்சுங் கொடியூர்தி
புவனத்தலைவனும் பெருமாள்
உலகமளந்த நெடும்பெருமாள்
உள்ளத்தினிக்க வரும்பெருமாள்
கன்னாருரித்தபடி நெஞ்சக்
கல்லையுருக்குந் திருப்பெருமாள்
காசுமலியுந் திமிரி நகர்க்
கரிய பெருமாள் கழல் பணிவாம். (7)

பிரமதேவர் வேறு.

நிலமகளாந் தன்மகளைத்தந் தைக்கீந்து
நெடுமாமன் மருகனுநிகழக் கொண்டுப்
புலமகளாந்தன் மனைவியவற்குமாமிப்
பொருத் தமுறக்கண்டானைப் புனிதன்றன்னைப்
பலமறைகளுன்கு நான்முகத்துந் தோன்றப்
பங்கயவாய் மலர்ந்தவனைப் பகவன்றன்னைப்
பிலமுதலாவுல கேத்தும் பெருமையானைப்
பிதாமகனைப் பிரமனையாம் பேணல் செய்வாம் (8)

சூரியன்.

பலவுமிதின்றோரவிழ் தட்டாதா வென்று
பகிப்பவர் போற்பசுநூல்கள் பார்த்துவேர்த்து
இலவினைக் காத்திருந்த கனியுண்ணாநண்ணு
திழந்துநலிபசுங் கிளிபோலேங்கித்தூங்கி
மலவிருளிற்போய்த் தெய்வமார்க்கம்புக்கு
மாழாந்து தாழ்ந்தழற்கே மடிந்தாளாகுங்
கலதிகளுக்கிருளோட்டி யொளியை நீட்டுங்
கதிரவனையதிரவினைக் கருத்துள் வைப்பாம் (9)

துர்க்கை கலி விருத்தம்.

பூவின்மானவர் வானவர் போற்றிடக்
கோவியான கொடிய மகிடனை
யாவிபோக்கியவன் றலையேறுநந்
தேவிசெம்பொற் சிலம்படி யேத்துவாம் (10)

நவக்கோள்கள் வேறு.

எருக்கணிந் தபரனருளாலுயிர்கட் கெல்லாம்
இருவினையின் பயனருத்தியறிவித் தென்றும்
இருக்குமனைமறியேறு விழவுச் சேக்கை
யிகலரிக்கன்னிகை கோற்றேள் விற்றைகுடமீனம்
அருக்கன்மதிச் சேய்புதன் பொன்பிருகுநீலன்
அரிப்பகையொண் கதிர்ப்பகை யொன்பதின்மாய
திருக்கறுநன்னிலைக் கோள்கள் செம்பொற்பாதந்
தினந்தொழுது மனங்க சிந்து தீங்கு தீர்வாம் (11)

சிவகணங்கள் வேறு.

அவகுணங்கள கற்றியறந்தருந்
தவகுணங்கள் சிறந்து தலைவனைப்
பவகணங்கள் பறந்திடப் பற்றிய
சிவகணங்களைச் சிந்தைசெய்தேத்துவாம். (12)

ஆதிசைவர் வேறு.

பூதிதெய்வமணிப் பொறியைந்துமே
நீதிசைவ நெறியெனத் தேற்றுபு
சோதிசைவத் திருவுருத் தொட்டிடும்
ஆதிசைவரையஞ் சலித்தேத்துவாம் (13)

வாழ்த்துகவி வேறு.

சோமநாதேசன்வாழி, சுந்தரவல்லிவாழி
மாமதமுகத்தோன்வாழி, மயிலுடைக்குமரன்வாழி
காமணிக்கண்ணீறைந்தக் கரந்திருத்தொண்டர்வாழி
வாமவூர்த் திமிரி வாழி வாழ்பவர் வாழி வாழி

திருச்சிற்றம்பலம்.

சோமநாதேஸ்வரர், திருவடி வாழ்க.

முற்றிற்று.